1987 ஏப்ரல் 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வேண்டும் என்று எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் சுற்றுப் பயணத்தில் ஈடுபடுகிறபோது ஆங்காங்கு சில குறிப்பிட்ட வறட்சிப் பகுதிகளை நேரடியாக கண்டறிந்து நிலைமைகளை அவர்கள் அறிந்து கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. இடையிலே சில மணித் துளிகள் அவர்களுக்கு அவகாசம் இருக்குமானால், அதற்கான வாய்ப்பு கிடைக்குமேயானால், அதை வருவாய்த் துறை சிறப்பு ஆணையாளர் மூலமாகவும், தலைமைச் செயலாளர் அவர்கள் வாயிலாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குச் சொல்லி ஆங்காங்கு இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் விரும்புவார்களானால் ½ மணி நேரமோ, ¾ மணி நேரமோ ஒதுக்கிடு செய்வதற்கு அவர்களுடைய விருப்பத்தை அறிந்து ஏற்பாடு செய்யலாம். ஆனால் ஏற்பாடு செய்ய முடியும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. அதற்கு ஏற்பாடு செய்யலாம் என்று சொல்கிறேன். அப்படி இருந்தால் ஆங்காங்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அறிவிப்பார்கள்.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) அரசு நிகழ்ச்சிகளுக்கு உறுப்பினர்கள் அழைக்கப்படாமை.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினையை உங்கள் மூலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எனது சேப்பாக்கம் தொகுதியில் சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள நேப்பியர் பூங்காவில் சென்னை மாநகராட்சியின் சார்பாக 62-வது வருடாந்திர மலர்க் காட்சி துவக்க விழா இன்று மாலை 6 மணிக்கு நடைபெற இருக்கிறது. நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதைத் துவக்கி வைக்கிறார்கள். தனி அதிகாரி அவர்கள் தலைமை தாங்குகிறார்கள். நான் அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர், அதேபோல் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி அவர்கள். இரண்டு பேரும் அந்த நிகழ்ச்சியில் புறக்கணிக்கப்பட்டு இருக்கிறோம். விளம்பரத்திலும் எங்கள் பெயர் இல்லை, அழைப்பிதழும் அனுப்பப்படவில்லை. ஒரு கட்சி சம்பந்தமான நிகழ்ச்சியாக இருந்தால் நான் கேட்கப் போவது இல்லை. அது அரசாங்க நிகழ்ச்சி. எதிர்க்கட்சியைச் சேர்ந்த

[திரு. அ. ரகுமான்கான்] [1987 ஏப்ரல் 10

நாங்களும் வரி கொடுக்கிறோம். எங்களுடைய வரியிலும் இந்த அரசு நடைபெறுகிறது. சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் ஆகிய எங்களை ஆயிரக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் லட்சோப லட்ச மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கும் எங்களை இப்படி அரசாங்கம், தனி அதிகாரி, கமிஷனர் அவமதிப்பது எந்த விதத்திலே நியாயம் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அனைவரும் வருக என்று கமிஷனர் அவர்கள் அழைப்பு விட்டு இருக்கிறார்கள். எங்களுக்கு அழைப்பு இல்லாமலேயே—தொகுதி எம்.எல்.ஏ.—அனைவரும் வருக என்று சொன்னால் என்ன பொருள்? ஏற்கெனவே நாவலர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்க நிகழ்ச்சிகளுக்கு நிச்சயமாக அழைக்கப்படவேண்டும் என்று இந்தச் சட்ட பேரவையில் அறிவித்து இருக்கிறார்கள். கஸ்தூரிபா ஆஸ்பிட்டல் என்னுடைய தொகுதியில் இருக்கிறது, அங்கு நடந்த நிகழ்ச்சிக்கு நான் அழைக்கப்படவில்லை. தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராகிய என்னை அவமானப் படுத்துகிறார்கள். ஆகையால் உங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புவது அதிகாரிகள் உத்தரவை மீறினால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? அப்படி இல்லையென்றால், ஜனநாயக ரீதியில் மக்களைத் திரட்டி, கறுப்புக் கொடி காட்டுவதைத் தவிர, வேறு வழியில்லை.

(முற்பகல் 11-10)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தகவல் எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களை வேண்டுமென்றே புறக்கணிக்கவில்லை. நான் இப்போதே அவர்களை இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டுமென்று அரசின் சார்பாக அழைப்பு விடுக்கின்றேன். அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். இப்படியெல்லாம் நடக்கக் கூடாது என்ற வகையில், மாநகராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், இவற்றில் நடைபெறும் முக்கியமான திறப்பு விழாக்கள் போன்ற அரசு நிகழ்ச்சிகளில் யார் யார் கலந்துகொள்ள வேண்டும், யார் யார்

1987 ஏப்ரல் 10] *[திரு. ச. இராமச்சந்திரன்]*

அழைக்கப்பட வேண்டுமென்பதைப் பற்றி ஒரு விரிவான உத்தரவை, ஒரு விதியை—ஒரு ரூலை, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் வகுத்து அதை நடைமுறைப்படுத்த இருக்கிறார்கள். அது இன்று அல்லது நாளை அரசின் சார்பில் வெளியிடப்படும். அந்த ரூல் வந்ததும், ஒரு தொகுதியில் நடக்கவிருக்கும் முக்கியமான விழாக்களில், சட்டமன்ற உறுப்பினர், எம்.பி., சென்ட்ரல் மினிஸ்டர்ஸ், ஸ்டேட் மினிஸ்டர்ஸ், பிரைம் மினிஸ்டர், பிரசிடெண்ட், வைஸ்-பிரசிடெண்ட், சீப் மினிஸ்டர், மினிஸ்டர்கள், இவர்கள் எல்லாம் அழைக்கப்பட வேண்டுமென்று முறைப்படுத்தி உத்தரவு வர இருக்கிறது. அதற்குப் பிறகு எந்தவிதமான சங்கடங்களும் எழ வாய்ப்பில்லை.

5. கவன ஈர்ப்பு

(அ) சீர்காழியில் தையல் தேர்வு மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கு. ரமணி, ஜே. ஹேமச்சந்திரன், கோ. வீரய்யன், வி. பி. சிந்தன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டுவருவார்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சீர்காழி, செம்பனார்கோவில், பூம்புகார், கொள்ளிடம், சிதம்பரம், மயிலாடுதுறை, மணல்மேடு போன்ற இடங்களில் தையல் பயிற்சி பெற்றவர்களுக்குத் தேர்வு மையம் சீர்காழியில் இல்லாததால், மாணவ-மாணவிகளுக்கு ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.